11. **கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சை :**

| **புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்** | **உச்ச புள்ளிகள்** |
|---|---|
| (i) சேவை மூப்பு | 60 |
| (ii) செயல்திறன் | 20 |
| (iii) விசேட தகைமைகள் | 20 |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** |

**(i). சேவை மூப்பு :**

மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய பூரண வருடம் ஒன்றிற்கு ஆறு (06) புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது பத்து (10) வருடங்களுக்கு அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர், தரம் I இல் கடமையாற்றிய பூரண வருடம் ஒவ்வொன்றிற்கும் ஐந்து (05) புள்ளிகள் வீதம் ஆகக்கூடியது பன்னிரண்டு (12) வருடங்களுக்கு புள்ளிகள் வழங்கப்படுவதோடு, இவற்றில் கூடிய புள்ளிகள் மட்டுமே கருத்திற் கொள்ளப்படும்

**(ii). செயல்திறன் :**

a. செயற்பாடுகளுக்கு ஐந்து (05) புள்ளிகள் வழங்கப்படும்.

b. விசேட கணக்காய்வு அல்லது விசாரணை செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஐந்து (05) புள்ளிகள் வழங்கப்படும்.

c. விசாரணை மற்றும் அபிவிருத்திக்கான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஐந்து (05) புள்ளிகள் வழங்கப்படும்.

d. நடுவர் தீர்ப்பு / விசேட கடமைகளுக்கு ஐந்து (05) புள்ளிகள் வழங்கப்படும் (கூட்டுறவு அபிவிருத்தித் துறையின் பங்களிப்பிற்காக)

**(iii). விசேட தகைமைகள் :**

a. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பட்டம் பெற்றிருந்தால் ஆறு (06) புள்ளிகள் வழங்கப்படும்.

b. அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றின் துறை சார்பாக எடுக்கப்பட்ட டிப்ளோமா அல்லது அதற்கு சமமான தகைமைகளுக்காக நான்கு (04) புள்ளிகள் வழங்கப்படும்.

c. தாய்மொழி அல்லாத மற்ற அரசகரும மொழியின் தேர்ச்சிக்காக ஆகக் கூடியது மூன்று (03) புள்ளிகள் வழங்கப்படும்.

d. பெறப்பட்ட மெச்சுரைகளில் ஆகக் கூடியது இரு மெச்சுரைக்கு ஒரு (01) புள்ளி வீதம் ஆகக் கூடியது (02) இரண்டு புள்ளிகள் வழங்கப்படும்.

e. நேர்முகப் பரீட்சையின் போது வெளிப்படுத்தும் திறமைகளுக்கு ஆகக் கூடியது ஐந்து (05) புள்ளிகள் வழங்கப்படும்.

இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அல்லது குறிப்பிடப்படாத விடயங்களில் கருதப்படுகின்ற அல்லது கருதப்படாத ஏதேனும் தெளிவின்மை சம்பந்தமாக மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று ஏதேனும் விசேட காரணங்களின் நிமித்தமாக குறித்த கட்டமைப்புசார் நேர்முகப்பரீட்சையை நடாத்த முடியாமல் போகும் பட்சத்தில் அது சம்மந்தமாக பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன், சேவையின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது சம்பந்தமான முடிவு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநரின் / கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் அறிவித்தலின் பேரில், நியமன அதிகாரியாலேயே தீர்மானிக்கப்படும்.

**எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.